பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 01 புதன்கிழமை 17.08.2022 கதிர் 173

## இராஜதந்திரிகளுக்கு இலங்கை விளக்கம்



ஐ.நா. மனித உரிமைகள் சபையின் மாநாட்டை எதிர்கொண்டுள்ள நிலையில், உலக நாடுகளின் இராஜதந்திரிகளுக்கு இலங்கை அரசு விளக்கமளிப்பை வழங்கியுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ☞2

# மக்களின் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டும்

## ரணிலைப் பற்றி எனக்குத் தெரியும்; என்னைப் பற்றி அவருக்குத் தெரியும் என்கிறார் மைத்திரி



நாட்டின் தற்போதைய நிலைமையில் அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் தங்களது கட்சிகள் தொடர்பானநிலைப்பாட்டைஒதுக்கிவைத்துவிட்டு மக்களின் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்ப்பதற்காக ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டியது அவசியமாகும்.

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஊடகங்களிடம் அவர் கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாட்டின் பொருளாதார நெருக்கடி நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளிலேயே அதிகளவு தாக்கம் செலுத்தியுள்ளது.

பொருளாதார நெருக்கடி கிராமப்புர பிரதேசங்களில் தாக்கம் செலுத்தாமல் இல்லை.

கிராமங்களை எடுத்துக்கொண்டால் விவசாயக் காணிகளில் இருப்பவற்றைப் பறித்து சமைத்து உண்ணும் வாய்ப்பு கிராம ☞2

# புலம்பெயர் தமிழர்கள் உதவி வழங்கத் தயார்

## தேசிய கொள்கைத் திட்டம் உருப்படியாக இருந்தால் சர்வகட்சி அரசுக்கு ஆதரவு என்கிறார் சாணக்கியன்



தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்குப் புலம்பெயர் தமிழர்கள் உதவத் தயாராக உள்ளனர். அதற்கான உத்வேகத்தை அதிகாரப் பகிர்வு அளிக்கும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தேசிய கொள்கைத் திட்டத்தை ஜனாதிபதி முன்வைத்தால் சர்வகட்சி அரசுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கும் எனவும் அவர் குறிப்பிட்டார். ☞2

## தடை நீக்கப்பட்ட அமைப்புகளை எச்சரிக்கும் பாதுகாப்பு அமைச்சு

தடை நீக்கப்பட்ட தமிழ் புலம்பெயர் அமைப்புகள், பயங்கரவாதத்துக்கு நிதி உதவியளிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது மீண்டும் உறுதியானால், மீண்டும் அவர்களைக் ☞2

ආරක්ෂක අමාත්‍යාංශය
Ministry of Defence

## இலங்கையில் புலம்பெயர்ந்தோர் காரியாலயம்

### ஜனாதிபதி ரணில் திட்டம்



இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிப்போரின் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்காக இலங்கையில் புலம்பெயர்ந்தோர் காரியாலயம் ஒன்று அமைக்கப்படவுள்ளது என்று ☞2

## 'மொட்டு'வுக்குள் சதிகாரக் குழு

### போட்டுடைத்தார் சாகர எம்.பி.



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்குள் சதிகாரக்குழு ஒன்று இருக்கின்றது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் பிளவு இருப்பதாககூறுவதில்எனக்கு உடன்பாடு இல்லை. ஆனால், கட்சியில் சிறு கும்பல் ஒன்று உள்ளது. அதில் வழிகெட்ட ☞2

## 'பீல்ட் மார்ஷல்' பதவி பறிக்கப்பட்டால் அதைவிட மேலான பதவி கிடைக்கும்

### பொன்சேகா நம்பிக்கை



பீல்ட் மார்ஷல் பதவியிலிருந்து என்னை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமானால், அந்தப் பதவிக்கு மேலான கௌரவப் பட்டத்துடன் மீண்டு வருவேன்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார். ☞2

## 'கப்புடா'வை தேசியப் பறவை ஆக்குமாறு டிலான் பரிந்துரை



கப்புட்டாவின் ஆலோசனையின் பிரகாரமே நாட்டில் ஆட்சி நடக்கின்றது. எனவே, 'கப்புடா'வை (காகம்) தேசிய பறவையாக அறிவித்தால்கூட பரவாயில்லை.

– இவ்வாறு சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய ☞2

### முகநூலில் கருத்து வெளியிட்ட இளைஞர் மீது

## தோட்ட நிர்வாகம் தாக்குதல்; நீதி கோரி மக்கள் போராட்டம்



தோட்ட நிர்வாகத்துக்கு எதிராக முகநூலில் கருத்து வெளியிட்ட இளைஞர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைக் கண்டித்து தோட்ட மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

டெஸ்போர்ட் தோட்டத்தில் உள்ள நல்லையா என்பவர், தனது முகநூல் ஊடக தெரிவித்த ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## தடை நீக்கப்பட்ட அமைப்புகளை ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கறுப்புப்பட்டியலில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் 2012ஆம் ஆண்டு விதிமுறைகள் இல. 1 இன் பிரகாரம் பயங்கரவாதத்துக்கு நிதி உதவியளித்தல் தொடர்பில் 2021ஆம் ஆண்டில் 18 அமைப்புகள் கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், 577 நபர்களும் இணைக்கப்பட்டுள்ளனர்.

வெளிவிவகார அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம், புலனாய்வு பிரிவுகள், சட்ட அமுலாக்கள் பிரிவினர் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவு அடங்கிய குழுவொன்றினூடாக, பயங்கரவாதத்துக்கு நிதி உதவியளித்தல் தொடர்பில் மேற்குறிப்பிடப்பட்ட நபர்கள் மற்றும் அமைப்புகளின் செயற்பாடுகள் குறித்து கடந்த சில ஆண்டுகளாக ஆய்வு செய்யப்பட்டன.

அவற்றில் கிடைத்த ஆதாரங்களுக்கமைய பாதுகாப்பு அமைச்சில் நடாத்தப்பட்ட பல சுற்று கலந்துரையாடல்களுக்குப் பின், கறுப்புப் பட்டியலிலிருந்து நீக்கப்பட மற்றும் சேர்க்கப்பட வேண்டிய நபர்கள் மற்றும் அமைப்புகள் குறித்து பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.

அதனடிப்படையில், 577 நபர்கள் மற்றும் 18 அமைப்புகளிலிருந்து பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதி உதவியளித்தல் செயற்பாடுகளில் ஈடுபாடு காட்டாத 316 நபர்கள் மற்றும் 6 அமைப்புக்களைப் பட்டியலிலிருந்து நீக்க முடிவு செய்யப்பட்டது.

மேலும், தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்ட மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதி உதவியளித்தல் தொடர்பில் சமீபத்தில் இனங்காணப்பட்ட 55 நபர்கள் மற்றும் 3 அமைப்புகளை புதிதாக அப்பட்டியலில் உள்ளடக்கவும் முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, பாதுகாப்புச் அமைச்சின் பரிந்துரையின் பேரில் கடந்த ஜூன் 29, அன்று வெளிவிவகார அமைச்சின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்ட பின், 316 நபர்கள் மற்றும் 15 அமைப்புகள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டு கடந்த முதலாம் ஆம் திகதி, இல 2291/02 அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதி உதவியளித்தல் தொடர்பில் நபர்கள் மற்றும் அமைப்புகள் கறுப்புப் பட்டியலில் உள்ளடக்கல் மற்றும் அகற்றல் நடைமுறையானது, அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களின் நீண்ட கால அவதானிப்பு மற்றும் தொடர் ஆய்வு நடவடிக்கைகளின் பின்னர் மேற்கொள்ளப்பட்டு வருவது வழமையாகும்.

## 'பீல்ட் மார்ஷல்' பதவி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

எனது நான்கு நட்சத்திர அந்தஸ்த்தை மஹிந்தவே நீக்கினார், அவர் என்னைப் பழிவாங்கினாலும், அதுவே எனக்கு சாதகமாக அமைந்தது. அதனால்தான் நான் பீல்ட் மார்ஷல் அந்தஸ்த்துக்குத் தரமுயர்த்தப்பட்டேன்.

தற்போது பீல்ட் மார்ஷல் பட்டத்தைப் பறிக்குமாறு சிலர் கூச்சலிடலாம். அவ்வாறு பறித்தாலும் அதைவிட உயரிய கௌரவ பதவியுடன் மீண்டும் வருவேன். 'மார்ஷல் ஒவ் ஸ்ரீலங்கா' என்பது உயரிய பட்டம். அந்த நாமம் கிட்டும் – என்றார்.

## 'மொட்டு'வுக்குள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குழுக்களும், சதிகாரக் குழுக்களும் இருக்கின்றன. எனினும், அவர்களில் பலர் தற்போது மீண்டும் இணைந்து அரசியல் செய்ய எங்களுடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளனர்.

இன்றும் எமது கட்சி இந்த நாட்டிலேயே அதிக உறுப்பினர்களையும் அமைப்புப் பலத்தையும் கொண்ட வலுவான அரசியல் கட்சியாகும். எதிர்வரும் எந்தவொரு தேர்தலிலும் இந்த நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளையும் விட அதிக வெற்றியைப் பெறக்கூடிய ஒரே கட்சி இந்தக் கட்சிதான் என நாங்கள் உறுதியாக நம்புகின்றோம் – என்றார்.

## 'கப்புடா'வை தேசிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேர்காணலில் அவர் மேலும் கூறுகையில்,

விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். உரப்பிரச்சினையால்தான் இந்நிலைமை ஏற்பட்டது. இவற்றுக்கு தீர்வைத் தேடாமல், தேசிய விலங்கான மர அணிலை மாற்ற வேண்டும் என யோசனை முன்வைக்கப்படுகின்றது.

நமது நாட்டை கப்புடா (பஸில்)தான் ஆள்கின்றது. எனவே, தேசிய பறவையாக கப்புட்டாவை அறிவித்தால்கூட பரவாயில்லை.

சர்வகட்சி அரசு என்ற போர்வையில் அமைச்சரவை எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது. மக்கள் இதனை எதிர்பார்க்கவில்லை – என்றார்.

## தோட்ட நிர்வாகம் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கருத்து தொடர்பில் விளக்கம் பெறுவதற்காக தோட்ட அதிகாரிகளால், நேற்று தோட்ட அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டார்.

விசாரணை என்ற போர்வையில் அவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது எனத் தோட்ட மக்கள் தெரிவித்தனர். இதையடுத்து அவர் நுவரெலியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவத்தை கண்டித்தும், நீதி கோரியும் தோட்ட மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## இலங்கையில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

நாட்டை மீட்பதற்கான பல்வேறு வேலைத்திட்டங்களில் ஒன்றாக இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைக்கு அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பு தேவை என்றும் ஜனாதிபதி கூறி யுள்ளார்.

அதேநேரம், சர்வதேச நாணய நிதியத்துடனான பணிக்குழாம்மட்ட ஒப்பந்தம் இறுதிக்கட்டத்தை நெருங்கியுள்ளது என்றும், அந்த உடன்படிக்கை இலங்கைக்குச் சிறந்த நம்பிக்கையைக் கொடுக்கும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

## புலம்பெயர் தமிழர்கள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து சுயாதீனமான உறுப்பினர்களுடன் இணைந்து எமது கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் வாக்கெடுப்பில் டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவாக வாக்களித்திருந்தது.

சர்வகட்சி ஆட்சியை உருவாக்குவதை நோக்காகக் கொண்டே இத்தீர்மானத்தை எடுத்திருந்தோம். பொருளாதாரத்தை மீண்டும் சரியான பாதையில் கொண்டு செல்வதற்கும் மக்களை ஒன்றிணைப்பதற்கு சர்வகட்சி இடைக்கால அரசு அமைப்பதே ஒரேயொரு வழியாக இருந்தது. இதனால்தான் டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவு தெரிவிக்க நாம் முடிவெடுத்தோம்.

பொதுஜன பெரமுனவின் வாக்குகளால் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டபோது, அக் கட்சிக்கு வெளியில் இருந்து ஒருவர் பிரதமராக நியமிக்கப்படுவார் என எதிர்பார்த்தேன். ஆனால், அது நிகழவில்லை. தற்போதைய அமைச்சரவையைப் பார்த்தால் முன்னைய அரச காலத்தைப் போன்றே காணப்படுகின்றது. பாரிய மாற்றங்கள் எதுவும் தென்படவில்லை.

அண்மையில் நாம் ஜனாதிபதியைச் சந்தித்து தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றிய விடயங்களை எடுத்துக் கூறியிருந்தோம். நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தேசியக் கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் அனைத்துக் கட்சி அரசை ஆதரிக்கத் தயாராக இருப்பதாகவும் அவருக்குத் தெரிவித்தோம். – என்றார்.

## மக்களின் பிரச்சினையை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மக்களுக்கு இருக்கின்றது. நகரப்புறங்களில் அவ்வாறு இல்லை.

எனவே, நாட்டின் பொருளாதாரம் பாரியளவு வீழ்ச்சியடைந்துள்ளது. கல்வித்துறையும் வீழ்ச்சியடைந்துவிட்டது. சுகாதாரத்துறையை எடுத்துக்கொண்டால் போதிய மருந்துகள் இல்லை.

வெளிநாடுகளிலிருந்து மருந்துகளை விலைக்கேனும் கொள்வனவு செய்ய முடியும். ஆனால், விசேட வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் குடும்பத்துடன் நாட்டைவிட்டு வெளியேறுவது என்பது தீவிரமான நிலைமையாகும்.

நாட்டில் அத்தியாவசிய சேவையை ஆற்றிவந்தவர்களே இவ்வாறு நாட்டிலிருந்து வெளியேறிவருகின்றனர்.

கடந்த இரண்டரை வருடங்களில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் தங்களது குடும்பத்தாருடன் வெளியேறி வருகின்றனர்.

நாட்டில் மகிழ்ச்சியடைக்கூடிய விடயங்கள் என்று கூறிக்கொள்வதற்கு ஒன்றும் இல்லை.

அரசு முன்னெடுக்கும் சிறந்த விடயங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவே நாட்டின் தற்போதைய ஜனாதிபதிக்கு நாங்கள் தெரிவித்துள்ளோம்.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள், உணவுத் தட்டுப்பாடு, வாழ்வாதார செலவீனம், எரிபொருள் பிரச்சினை, எரிவாயு பிரச்சினை, பொருள்களின் விலை அதிகரிப்பு, விவசாயிகள் எதிர்கொண்டுள்ள உரப்பற்றாக்குறை, அதேபோன்று ஏனைய தொழிற்றுறை சார்ந்தோர் எதிர்கொண்டுள்ள பிரச்சினை இவற்றுக்கு எதிராக முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படுமாயின் நாம் அவற்றுக்கு எமது பூரண ஒத்துழைப்பை வழங்குவோம் என்று கூறியுள்ளோம்.

நாங்கள் உடன்படாத விடயங்கள் அரசால் முன்னெடுக்கப்பட்டால் அதற்கு எதிர்ப்பை தெரிவிப்போம் என்றும் நாம் கூறியுள்ளோம்.

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் நானும் ஐந்து வருடங்கள் ஒன்றாகப் பணியாற்றியுள்ளோம். எனவே, அவரைப் பற்றி எனக்கு நன்கு தெரியும். என்னைப் பற்றி அவருக்கு நன்கு தெரியும்.

நாடு தற்போது எதிர்கொண்டு இருக்கும் நெருக்கடி நிலைமைக்கு மத்தியில் அரசியல்வாதிகளின் கடந்த காலங்களை விமர்சிப்பது அவசியமற்ற ஒரு விடயமாகும்.

அரசியல் கட்சிகள் பற்றி ஆராய்ந்து பார்த்துக்கொண்டு இருக்க முடியாது – என்றார்.

## இராஜதந்திரிகளுக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தலைமையிலான குழு ஒன்று கொழும்பில் உள்ள வெளிநாடுகளின் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தா னிகர்களைச் சந்தித்துள்ளது.

இதன்போது மனித உரிமைகள் மற்றும் சட்டத்திட்டங்கள் தொடர்பாக இதுவரையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கொரோனா பரவலுக்குப் பின்னரான இலங்கையின் நிலைமைகள் மற்றும் அரசியல் யாப்புடன் அமைந்த சட்ட நடைமுறைப்படுத்தல் செயற்பாடுகள் போன்றவை குறித்த தெளிவுபடுத்தல்கள் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் பயங்கரவாதத் தடைச் சட்டம் குறித்து விரிவான மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது என்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இதன்போது குறிப்பிட்டுள்ளார்.


விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி
இலக்கம்-
076 443 8622



# இது ஒரு வர்த்தக விளம்பரம்

அரசியல் பொருளாதார சீர்கேடுகளால் நாடு நலிவுற்றிருக்கிறது. இந்நிலையில் இளைஞர்கள் அரச தொழிலை எதிர்பார்க்க கூடாது. உள் நாட்டிலோ வெளி நாட்டிலோ தொழில் தேட வேண்டும் அல்லது சுய தொழில் ஆரம்பிக்க வேண்டும். இரண்டுக்கும் தொழில் தகமையை வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். கல்லூரியும் பல்கலைக்கழகமும் அடிப்படை கல்வியை தான் தருவார்கள். தொழில் கல்வி, தொழில் பயிற்சி, இவை தொடர்பான வேலை அனுபவம் சேரும் போது தான் தொழில் தகைமை வளரும்.

தொழில் கல்வி. தொழில் பயிற்சி, பிரதானமாக வேலை அனுபவம் பெற நம் நாட்டில் வசதிகளில்லை. இந்தியாவில் இப்பயிற்சிக்கான வாய்ப்புகள் நிறைய உண்டு. இந்தியாவில் பயிற்சி பெற்ற ஒட்டுனர்கள் ( welders) மற்றும் விருந்தோம்பல் துறை ஊழியர்கள் ( Hospitality workers) உலகின் பல நாடுகளில் வேலை செய்கிறார்கள். அவர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனங்களே வாய்ப்புகளைப் பெற்றுத்தருகிறார்கள். இவை பற்றி மேலதிக விவரங்கள் அறிய

jananayakam.associates@gmail.com

என்னும் மின் அஞ்சல் விலாசத்திற்கு குறுகிய சுய விவரக்கோவையுடன் (brief bio data) தொடர்பு கொள்ளவும்.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## 'ஒரே நாடு;ஒரே சட்டம்' - ஒரே நோக்கம்

**பௌத்த, சிங்களப் பேரினவாத மேலாதிக்க வெறிப் போக்கை நிலைப்படுத்தும் விதத்தில் காலத்திற்குக் காலம்கொண்டுவரப்பட்டசட்டங்களும், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும்தான் நாட்டின் இன்றைய இழி நிலைக்குக் காரணம் என்பது கண்கூடு.**

**இந்த இலங்கைத் தீவு பல்லின, பன்மொழி, பல் கலாசார மனித குழுமங்களின் வரலாற்றுத் தாயகம் என்ற பாரம்பரியத்தை மறந்து – மறைத்து – முழுத் தீவுமே பௌத்த, சிங்களவர்களுக்கு மட்டுமேயான தாயகம் என்ற பேரினவாத வெறிப்போக்குச் சிந்தனையை நடைமுறைப்படுத்த முயன்ற முட்டாள்தனத்தின் விபரீத விளைவைத்தான் நாடு இன்று அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.**

**தனிச் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டமையும், வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகத்தைத் துண்டாடிக் கபளீகரம் செய்யும் வஞ்சக நோக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை அரசே முன்னின்று முன்னெடுத்தமையும், காலத்துக்குக் காலம் சிறுபான்மையினர் மீது கலவரங்களைக் கட்டவிழ்த்து விட்டு, அவர்களின் வாழ்வாதாரங்களைத் தேடித்தேடி அழித்தமையும், மாவட்ட ரீதியான அனுமதி முறையைக் கொண்டு வந்ததன் மூலம் பல்கலைக்கழகங்களுக்குத் திறமை அடிப்படையில் சிறுபான்மையின மக்கள் தேர்வு செய்யப்படுவதற்கு ஆப்பு வைத்தமையும், பௌத்த, சிங்கள மாணவர்களுக்கு அதிக அனுமதி உரிமையை வழங்கியமையும் இவ்வாறான பேரினவாதச் சிந்தனை வெறிப்போக்கின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டவைதான்.**

**அந்தப் பேரினவாத வெறிப்போக்கில் இருந்து வெளியே வந்து, நீதி, நியாயமாக நடப்பதற்கு – செயல்படுவதற்கு – தென்னிலங்கை அரசியல் முறைமையே பின்னடிக்கின்றது.**

**அந்தப் பேரினவாத வெறிப்போக்கின் அண்மைக் கால குறியீடாக இருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அந்த இனவாத வெறிப்போக்கை நடைமுறைப்படுத்தும் நோக்கத்துடன் அமைத்ததுதான் 'ஒரே நாடு; ஒரே சட்டம்' செயலணி.**

**இந்த நாட்டின் பன்மைத்துவ இருப்பை உறுதி செய்து, ஒவ்வொரு மக்கள் குழுமத்திற்கும் தனித்துவமான பண்புகள், பழக்கவழக்கங்கள், வழக்காறுகள், மரபு முறைகள். ஒழுங்குமுறைகள் போன்றவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக இந்நாட்டில் ஆங்கிலேயச் சட்டம், றோமன் – டச்சுச் சட்டம், தேசவழமைச் சட்டம், முஸ்லிம் சட்டம், கண்டியச் சட்டம் என்ற ஐவகை சட்டங்கள் நூற்றாண்டு கடந்தும் நடைமுறையில் இருக்கின்றன.**

**தனிச் சிங்கள, பௌத்த பேரினவாத நிலைப்பாட்டை நிலைநிறுத்துவதாயின் இந்த மற்றச் சட்டங்களை ஒழித்து, அவற்றின் மூலம் பிற இன குழுமங்களின் தனித்துவச் சிறப்பை பேணுவதற்காக உள்ள ஒழுங்கு முறைகளைத் தகர்த்து, அவற்றின் இருப்பையே சிதைத்தழிக்க வேண்டும் எனக் கங்கணம் கட்டி, அதன் அடிப்படையில் பிரேரிக்கப்பட்டு, முன்னெடுக்கப்பட்டதே இந்த 'ஒரே நாடு; ஒரே சட்டம்' செயலணி.**

**பௌத்த, சிங்கள இனவெறித் திமிரின் பிறப்பாக்கமான அந்த செயலணியின் பரிந்துரைகளை குப்பைக் கூடைக்குள் தூக்கிக் கடாசாத வரை, இந்த நாட்டில் இன சௌஜன்யமோ, அமைதியோ, சமாதானமோ, அபிவிருத்தியோ, மீளெழுச்சியோ சாத்தியமே இல்லை. அதைத் தூக்கிக் கடாசுவதற்கு ரணிலின் புதிய அரசு கருத்துக் கொள்வது வரவேற்கத்தக்க விடயம்.**

# முகத்தை முழுமையாக மறைக்கும் தலைக்கவசம்!

## தளர்த்தப்பட்டுள்ளது சட்டம்

முகத்தை முழுமையாக மறைக்கும் தலைக்கவசம் தொடர்பிலான சட்டம் தளர்த்தப்பட்டுள்ளது.

அதேநேரம் மோட்டார்சைக்கிள்களைச் செலுத்துபவர்கள் மற்றும் பின்னால் அமர்ந்து செல்பவர்கள் பாதுகாப்பு தலைக்கவசம் அணிவதை கட்டாயமாக்கும் விதி முறைகளுடன் புதிய வர்த்தமானி அறிவிப்பு (2287/28) வெளியிடப்பட்டுள்ளது.

மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் 158 ஆவது பிரிவின் கீழ், கடந்த மாதம் 7ஆம் திகதி போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சரால், இந்த வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பின்படி, மோட்டார்சைக்கிள் ஓட்டுபவர் மற்றும் பின்னால் அமர்ந்து செல்வோர், பாதுகாப்பு தலைக்கவசம் அணிவது கட்டாயமாகும்.

இந்தத் தலைக்கவசங்கள், இலங்கை தரநிலை விவரக்குறிப்பின் 'பி' வகை பாதுகாப்பு தலைக்கவசங்கள் அல்லது பொருந்தக்கூடிய வேறு ஏதேனும் தர நிலைகளில் வகைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

அத்தகைய பாதுகாப்பு தலைக்கவசம் இலங்கை தர நிர்ணய நிறுவனத்தால் வழங்கப்பட்ட தயாரிப்பு சான்றிதழ் (எஸ்.எல்.எஸ்.) அடையாளத்தை கொண்டிருக்க வேண்டும்.

அவற்றின் வெளிப்புற மேற்பரப்பில் இருந்து ஒளி பிரதிபலிக்கக் கூடாது. அத்துடன் பாதுகாப்பு தலைக்கவசங்களில் அதிர்ச்சியை உறுஞ்சும் லைனர், சின் ஸ்ரொப், பஃபர் பேடிங் மற்றும் ஹெட் பேண்ட் ஆகியவை இருக்க வேண்டும்.

எவ்வாறாயினும், குற்றத்தடுப்பில் ஈடுபடும் பொலிஸ் அதிகாரி அல்லது இலங்கை இராணுவம், கடற்படை அல்லது விமானப்படை உறுப்பினர்களுக்கு மற்றும் தேசிய பாதுகாப்பில் பணி புரிவோருக்கு இந்த விதி முறைகள் பொருந்தாது என்று அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தரம் வாய்ந்த உள்நாட்டு மதுபான போத்தல்களை அடையாளம் காண விசேட செயலி ஒன்று அறிமுகம்!

முறையான தரம் வாய்ந்த உள்நாட்டு மதுபானப் போத்தல்களை அடையாளம் காணும் விசேட செயலியொன்று எதிர்வரும் இரு வாரங்களில் அறிமுகப்படுத்தப் படவுள்ளது. மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் எம்.ஜே.குணசிறி இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி செயலி இதற்கு முன்னர் அறிமுகப்படுத்தப்படவிருந்ததாகவும், ஆனால் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அது தாமதமாகியதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த கணினி செயலி ஊடாக மது போத்தல்களில் ஒட்டும் ஸ்டிக்கரைக் கொண்டு, நுகர்வோர் அனைத்து விவரங்களையும் அதை உற்பத்தி செய்த உற்பத்தியாளரிடம் இருந்து தெரிந்து கொள்ள முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போலி மதுபானங்களைத் தடுப்பதே இதன் முக்கிய நோக்கம் என மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் எம்.ஜே. குணசிறி தெரிவித்துள்ளார்.

இறக்குமதி செய்யப்படும் வெளிநாட்டு மதுபானங்களுக்கு ஏற்கனவே இந்தக் கணினி செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக சுகாதாரத் துறையினர் ஆர்ப்பாட்டம்!



இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக சுகாதாரத் துறை ஊழியர்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இலங்கை தேசிய வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று (செவ்வாய் கிழமை) இடம்பெற்றுள்ளது.

சுகாதார சங்கத்தின் ஊழியர்கள் அனைவரும் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

சுகாதாரத் துறையில் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களில் நிலவும் தட்டுப்பாடுகளுக்கும், நாட்டின் நெருக்கடி நிலைமைக்கு விரைவான தீர்வைக் கோரியும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக் கப்பட்டுள்ளது.

# யாழில் அதிபர் தாக்கியதில் மாணவன் காயம் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை விசாரணை!

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் பயிலும் 14 வயது மாணவன் அதிபரால் தாக்கப்பட்டு காயமடைந்துள்ளமை தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

இந்தச்சம்பவம்தொடர்பில்;திங்கட்கிழமை கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நல்லூர் விநாயகர் வீதியைச் சேர்ந்த 14 வயது மாணவனே இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ளார்.

தான் சொன்ன பணியைச் செய்யவில்லை என்று தெரிவித்து அதிபர், மாணவனைக் கடுமையாகத் தாக்கினார் என்று ஆரம்ப விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவனுக்கு நெற்றியில் காயம் ஏற்பட்டதுடன் உடல், உள ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, பொலிஸ் புலனாய்வுப் பிரிவும் இந்தச் சம்பவம் தொடர்பில் அறிக்கையிட்டுள்ளது.

# உக்ரைன், தைவானில் பதற்றமான சூழ்நிலைக்கு அமெரிக்காவே காரணம் என புடின் குற்றச்சாட்டு

மொஸ்கோ,ஓக.17

உலகின் பல்வேறு பகுதிகளில் பதற்றமான சூழலை அமெரிக்கா உருவாக்கி வருகிறது. உக்ரைன் மற்றும் தைவானில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழலுக்கும் அமெரிக்காவே காரணம் என்றார் ரஷ்ய அதிபர் புடின்.

உக்ரைனில் நீண்ட நாள்களாக நடைபெறும் சண்டை உள்பட உலகின் பல்வேறு பகுதிகளில் பதற்றமான சூழலை அமெரிக்கா உருவாக்கி வருகிறது என ரஷ்ய அதிபர் புடின் குற்றம்சாட்டினார். மேலும், அமெரிக்க சபாநாயகர் பெலோசியின் தைவான் பயணத்தையும் அவர் குறிப்பிட்டுப் பேசினார். இது தொடர்பாக, அதிபர் புடீன் கூறியவை வருமாறு:-

மோதல் பகுதிகளில் போரை நீடிக்கும் நோக்கத்துடன் அமெரிக்கா நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. இந்த மோதலை நீடிக்க அமெரிக்கா முயல்வதையேஉக்ரைன்நிலைமைகாட்டுகிறது. ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்கா பகுதிகளிலும் அமெரிக்கா அதையே செய்ய முயற்சிக்கிறது.

தைவானுக்குச் சென்ற அமெரிக்க சபாநாயகர் பெலோசியின் பயணம், ஒரு தனிப்பட்ட பொறுப்பற்ற அரசியல்வாதியின் பயணம் மட்டுமல்ல, தைவான் பிராந்தியத்திலும் உலகின் பிற பகுதிகளிலும், நிலைமையைச் சீர்குலைத்து குழப்பமடையச்செய்யும் நோக்கத்துடன்செயல்படும் அமெரிக்க உத்தியாகும் எனத் தெரிவித்தார்.



# குரங்கு அம்மை நோய் ஈரானுக்கும் பரவியது




ஈரான் நாட்டில் முதல் முறையாக ஒருவருக்கு குரங்கு அம்மை நோய் பாதிப்பு இருப்பது உறுதியாகி உள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக உலக நாடுகளை அச்சுறுத்தி வந்த கொரோனாத் தொற்று, தற்போது கட்டுக்குள் வந்துள்ளது. இந்நிலையில், ஆப்பிரிக்காவில் புதிதாக உருவான குரங்கம்மை நோய், தற்போது உலகம் முழுவதும் பரவி வருகிறது. இதன் காரணமாக பல நாடுகளில் தீவிர கண்காணிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இங்கிலாந்து, ஸ்பெயின், போர்ச்சுகல், கனடா, அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் குரங்கு அம்மை பரவியுள்ளது என உலக சுகாதார அமைப்பு அறிவித்திருந்தது.

இந்நிலையில், ஈரான் நாட்டில் முதல் முறையாக ஒருவருக்கு குரங்கு அம்மை நோய் பாதிப்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது என அந்நாட்டு சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. 34 வயது பெண் ஒருவருக்கு குரங்கு அம்மை நோய் பாதிப்பு கண்டறியப்பட்டதும், அவர் தனிமையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எண்ணெய் டாங்கரை மோதியது பஸ் இரண்டும் தீப்பிடித்ததில் 20 பேர் பலி

## 6 பேர் படுகாயம்; சிந்து மாகாணத்தில் சம்பவம்

கராச்சி,ஓக17

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் இன்று பயணிகள் பஸ் ஒன்று எண்ணெய் ஏற்றி வந்த டாங்கர் லொறியின் பின்புறம் மீதுமோதிவிபத்துக்குள்ளானது. இதில் இரண்டு வாகனங்களும் தீப்பிடித்து எரிந்தன.

முல்தான் - சிக்கூர் சாலையில் நிகழ்ந்த இந்த விபத்தில் 20 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். 6 பேர் பலத்த காயமடைந்தனர்.

பஸ்ஸின் சாரதி தூக்க கலக்கத்தில் இருந்தமையால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் சிந்து மாகாணத்தின் கராச்சி சாலையில் ரோஹ்ரி அருகே பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ், டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட 8 பேர் உயிரிழந்தனர். 20 பேர் காயமடைந்தனர்.

சிந்து மற்றும் பஞ்சாப் மற்றும் கைபர் பாக்துன்க்வா மாகாணங்களை இணைக்கும் நெடுஞ்சாலையில் சாலை விபத்துக்கள் அடிக்கடி நிகழ்கின்றன. பெரும்பாலும் தனியாருக்குச் சொந்தமான பயணிகள் பஸ்களே விபத்தில் சிக்குகின்றன.

அதிவேகமாக வாகனங்களை ஓட்டுதல், வாகன உரிமம் மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து சரியாக சோதனை செய்யாதமை போன்ற காரணங்களால் விபத்துகள் ஏற்படுகின்றன எனக் குற்றம்சாட்டப்படுகிறது.

# கொரோனாப் பாதிப்புக்குள்ளானார் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர்

வொஷிங்டன்,ஓக.17

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சருக்கும் கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. அமெரிக்காவில் உருமாறிய கொரோனா வைரஸான ஒமைக்ரான் அதிகமாக பரவி வருகிறது.

அந்த நாட்டின் ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த மாதம் 10 நாள்கள் இடைவெளியில் 2 முறை கொரோனாத் தொற்றுப் பாதிப்புக்கு ஆளானார்.

இந்த நிலையில் அமெரிக்காவின் பாதுகாப்பு அமைச்சரான லொயிட் ஒஸ்டினுக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதை தொடர்ந்து அவர் வீட்டில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளார். 69 வயதான லொயிட் ஒஸ்டின்தனக்கு லேசான அறிகுறிகள் இருப்பதாகவும், அடுத்த 5 நாள்கள் தாம் வீட்டில் இருந்து பணியாற்ற இருக்கிறார் எனவும் தெரிவித்துள்ளார்.

ஒஸ்டின் 2 ஆவது முறையாக கொரோனாப் பாதிப்புக்கு ஆளாகியுள்ளார். இதற்கு முன் கடந்த ஜனவரி மாதம் அவருக்கு தொற்று உறுதியானது. பூஸ்டர் உள்பட கொரோனா தடுப்பூசியின் 3 டோஸ்களையும் செலுத்திக்கொண்டவர் லொயிட் ஒஸ்டின் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் மனைவி ஜில் பைடனுக்கு கொரோனா பாதிப்பு உறுதிசெய்யப்பட்டு உள்ளது.



அமெரிக்காவின் முதல் பெண்மணி ஜில் பிடனுக்கு கொரோனாவுக்கான லேசான அறிகுறிகள் கானப்பட்டன. இதையடுத்து அவருக்கு பரிசோதனை மேற்கொண்டபோது அவருக்கு பாதிப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. அவரது கணவவரும் அதிபருமான ஜோ பிடன் இரண்டாவது முறையாக வைரஸால் பாதிக்கப்பட்ட இரண்டு வாரங்களுக்குப் பிறகு, தற்போது அவரின் மனைவிக்கு பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து அவர் தற்போது உரிய சிகிச்சையை எடுத்தவாறு தனிமைப் படுத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டு உள்ளது.



# கர்ப்பப்பை புற்றுநோயால் ஹாலிவுட் நடிகை மரணம்

கர்ப்பப்பை புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஹாலிவுட் நடிகை ராபின் கிரிக்ஸ் என்பவர் சிகிச்சை பலனின்றி இறந்தார். பென்சில்வேனியாவை சேர்ந்த ஹாலிவுட் நடிகை ராபின் கிரிக்ஸ் (49) கடந்த மாதம் வெளியிட்ட பதிவில்,'எனது கல்லீரலில் இரண்டு புதிய கட்டிகள், வயிற்று தசையில் ஒன்று மற்றும் வலதுபக்க நிணநீர் முனையில் பெரிய கட்டிகள் உள்ளன'என்று தெரிவித்தார். மருத்துவ பரிசோதனையில் அவருக்கு கர்ப்பப்பை புற்றுநோய் இருப்பதும் கண்டறியப்பட்டது. தொடர் சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று சிகிச்சை பலனின்றி இறந்தார். இதுகுறித்து அவரது மேலாளர் வெளியிட்ட அறிவிப்பில்,'கர்ப்பப்பை புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த ராபின் கிரிக்ஸ் காலமானார்.

'ஒன் லைஃப் டு லைவ்','அனதர் வேர்ல்ட்'போன்ற படங்களில் நடித்த இவர், திகில் படங்களில் நடித்து பிரபலமானவர்'என்று தெரிவித்துள்ளார். முன்னதாக அவரது தந்தை ராபின் வெளியிட்ட பதிவில்,'நேற்றுடன் அவர் அந்த காப்பகத்தில் (மரணம்) நுழைந்தார். மிகுந்த உறுதியுடனும், வலிமையுடனும் தனக்கு ஏற்பட்ட நோயுடன் அவர் போராடினார். கடினமான இந்த நேரத்தில் அவருக்காக பிரார்த்திப்போம்'என்று குறிப்பிட்டு இருந்தார். நடிகை ராபின் கிரிக்ஸ்யின் மறைவுக்கு ஹாலிவுட் பிரபலங்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்

# அ.தி.மு.க. வழக்கு; ஜூன் 23 நிலையே தொடரும்! எடப்பாடி எடுத்த முடிவுகள் அத்தனையும் அம்போ!



அ.தி.மு.கவில் ஜூன் 23ஆம் திகதி இருந்த நிலையே நீடிக்கும் எனவும் எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் இருவரும் இணைந்தே பொதுக்குழுவைக் கூட்ட வேண்டும் எனவும், பழனிசாமி பொதுச் செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டது செல்லாது எனவும் சென்னை உயர்நீதிமன்றம் இன்று அதிரடித் தீர்ப்பு வழங்கி உள்ளது.

அ.தி.மு.க.,வில் ஒருங்கிணைப்பாளராக பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளராக பழனிசாமி இருந்தனர். மாநில ஆட்சியில் இருந்த வரை, பிரச்சினை இல்லாமல் சென்றது. சட்டசபைத் தேர்தலுக்குப் பின், பழனிசாமி – பன்னீர்செல்வம் இடையே அதிகார மோதல் உருவானது.

கட்சி அதிகாரத்தை முழுமையாக கைப்பற்ற நினைத்த பழனிசாமி தரப்பு, பொதுக்குழுக் கூட்டத்தை, ஜூலை 11ல் கூட்டியது.

அதற்கு தடை விதிக்கக் கோரி, பன்னீர்செல்வமும், பொதுக்குழு உறுப்பினர் வைரமுத்து என்பவரும், சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்தனர்.ஆனால், திட்டமிட்டபடி பொதுக்குழுவை கூட்டிய பழனிசாமி அணியினர், கட்சியின் இடைக்கால பொதுச் செயலராக பழனிசாமியை தேர்வு செய்தனர். ஒருங்கிணைப்பாளராக இருந்த பன்னீர்செல்வம் மற்றும் அவரது ஆதரவாளர்களையும், கட்சியில் இருந்து நீக்கினர்.

இதையடுத்து அ.தி.மு.க. பொதுகுழுவுக்கு அனுமதி அளித்த உத்தரவுக்கு எதிராக சுப்ரீம்கோட்டில் ஓ.பன்னீர்செல்வம் மேல்முறையீட்டு மனுத் தாக்கல் செய்தார்.

அதில் ஜூலை 11 ஆம் திகதி நடந்த அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில் கட்சியின் சட்ட விதிகள் அனைத்தும் மீறப்பட்டுள்ளன. ஒருங்கிணைப்பாளர் அனுமதி இல்லாமல் கூட்டம் நடத்த அதிகாரம் இல்லை என்பதால் பொதுக்குழு நடத்த அனுமதி வழங்கிய சென்னை ஐகோர்ட்டின் தனி நீதிபதி வழங்கிய உத்தரவுக்கு தடை விதிக்க வேண்டும். பொதுக் குழுத் தீர்மானங்களை ரத்து செய்ய வேண்டும் என்றும் அந்த மனுவில் கோரியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு, அ.தி.மு.க. பொதுக்குழு விவகாரம் தொடர்பான வழக்கை ஐகோர்ட்டே விசாரிக்க வேண்டும் என்றும், வழக்கை 2 வாரத்தில் விசாரித்து முடிக்க வேண்டுமெனவும் தனி நீதிபதிக்கு உத்தரவிட்டது. இதனைத் தொடர்ந்து இந்த வழக்கு தனி நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி முன் விசாரணைக்கு வந்தது. ஆனால், நீதிபதி கிருஷ்ணன் இந்த வழக்கை விசாரிக்க ஆட்சேபம் தெரிவித்து ஓ.பன்னீர் செல்வம் தரப்பு ஐகோர்ட்டு தலைமை நீதிபதிக்கு கடிதம் எழுதியது. இதையடுத்து, அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டம் தொடர்பான வழக்கை நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி தலைமை நீதிபதி முனீஸ்வர்நாத் பண்டாரியிடம் ஒப்படைத்துவிட்டு இந்த வழக்கில் இருந்து விலகினார். தனி நீதிபதி கிருஷ்ணன் இந்த வழக்கில் இருந்து விலகியதையடுத்து அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டம் தொடர்பான வழக்கு நீதிபதி ஜெயச்சந்திரனுக்கு மாற்றப்பட்டது. இரண்டு நாள்களாக நடந்த இந்த விசாரணையில் எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் இருதரப்பு வாதங்கலையும் கேட்ட நீதிபதி ஜெயச்சந்திரன் தீர்ப்பை தள்ளிவைத்தார்.

இந்த வழக்கில் இன்று தீர்ப்பு வெளியிடப்படும் என அறிவிக்கபட்டது. இன்று காலை 11.30 மணிக்கு தீர்ப்பு வழங்கபட்டது. அதில்–

”அ.தி.மு.க வின் ஜூன் 23 ஆம் திக்கு முந்தைய நிலையே நீடிக்க வேண்டும். ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் இணைந்துதான் பொதுக்குழு, செயற்குழுவை கூட்ட வேண்டும். தனி கூட்டம் கூட்டக்கூடாது. பொதுக்குழு கூட்ட ஆணையரை நியமிக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தின் தீர்ப்பை அடுத்து ஓ.பன்னீர்செல்வம் இல்லத்தில் அவரது ஆதரவாளர்கள் பட்டாசு வெடித்துக் கொண்டாடினர்.



## சென்னை வங்கியில் கொள்ளை போன 31.7 கிலோ தங்க நகைகளுமே மீட்பு!

சென்னையில் வங்கியில் இந்தியப் பணத்தில் 20 கோடி ரூபா மதிப்புள்ள 31.7 கிலோ தங்க நகைகளைக் கொள்ளையடித்த வழக்கில் கொள்ளை போன முழு நகைகளும் மீட்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

முக்கிய குற்றவாளி முருகன் மற்றும் அவரது கூட்டாளிகள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் ஒரே பள்ளியில் படித்த மாணவர்கள் என்பது விசாரணையில் அம்பலமாகி உள்ளது. அவர்களிடம் இருந்து 18 கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்டிருந்த நிலையில், தற்போது மேலும் 10 கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது. விழுப்புரத்தில், இந்த வழக்கில் கைதான சூர்யா என்பவனின் நண்பரிடம் இருந்து இந்தத் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

கோவையில் 3 கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது. 700 கிராம் தங்க நகைகள் உருகிய நிலையில் தங்கம் மீட்கப்பட்டதாக சென்னை பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதன் மூலம், வங்கியில் கொள்ளை போன அனைத்து நகைகளும் மீட்கப்பட்டன.

## மராட்டியத்தில் இரு ரயில்கள் மோதல் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் படுகாயம்

மராட்டியத்தில் பயணிகள் ரயிலும், சரக்கு ரயிலும் மோதி விபத்துக்குள்ளான சம்பவத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

மும்பை, சத்தீஸ்கர் மாநிலம் பிலாஸ்பூரில் இருந்து பயணிகள் ரயில் நேற்று ராஜஸ்தான் மாநிலம் ஜோதாப்பூர் நோக்கிப் புறப்பட்டது. அந்த ரயில் இன்று அதிகாலை 2.30 மணியளவில் மராட்டிய மாநிலத்தின் கொண்டியா என்ற பகுதியில் சென்று கொண்டிருந்தபோது அதே தண்டவாளத்தில் வந்த சரக்கு ரயில் மீது மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் பயணிகள் ரயிலின் 3 பெட்டிகள் தடம் புரண்டன. இந்த விபத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இந்த சம்பவம் குறித்துத் தகவலறிந்த ரயில்வே பொலிஸாரின் மீட்புக்குழுவினர் விபத்து நடந்த பகுதிக்கு விரைந்து சென்று படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுமதித்தனர். அதிர்ஷ்டவசமாக இந்த விபத்தில் உயிரிழப்பு எதுவும் நிகழவில்லை. சிக்னல் கோளாறு காரணமாக இந்த விபத்து நடந்துள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

## ஹெலியிலும் இலங்கைக் கடற்படை ராமேஸ்வரம் மீனவர்கள் அதிர்ச்சியில்

ராமேஸ்வரம்,ஒக.17

இலங்கைக் கடற்படையினர் கடல் பிராந்தியத்தில் ஹெலிக்கொப்டரில் ரோந்து சுற்றிக் கண்காணித்து நடவடிக்கை எடுக்கின்றமையால் ராமேஸ்வரம் மீனவர்கள் அதிர்ச்சி அடைந் துள்ளனர்.

ராமேஸ்வரத்தில் இருந்து 600 விசைப்படகுகளில் மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் வழக்கம் போல் இந்திய – இலங்கை எல்லையில் மீன் பிடித்தனர். ஓரிரு தினங்களுக்கு முன் மாலை இலங்கை தலைமன்னாரில் இருந்து ஹெலிக் கொப்டரில் கடற்படை வீரர்கள் அப்பகுதியில் ரோந்து சுற்றி நோட்டமிட்டமையைக் கண்ட தமிழக மீனவர்கள் பீதியடைந்தனர்.

அடுத்த சில நிமிடத்தில் இரு ரோந்து கப்பலில் வந்த இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கியை காட்டி எச்சரித்து மீனவர்களை மீன் பிடிக்க விடாமல் விரட்டினர். இதனால் ஐம்பதுக்கும் மேற் பட்ட படகுகளில் இருந்த மீனவர்கள் கடலில் இழுத்து வந்த வலையை வெட்டி மூழ்கடித்து விட்டு வெறும் படகுகளுடன் கரை திரும்பினர். மற்றவர் களுக்கு காரல் உள்ளிட்ட மீன்கள் கிடைத்தன.

ராமேஸ்வரம் மீனவர்கள் கூறுகையில், 'முதன் முறையாக பாக்ஜலசந்தி கடலில் இலங்கை வீரர்கள் ஹெலிக்கொப்டரில் ரோந்து சுற்றியமை எங்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அவர்கள் அளித்த தகவலை அடுத்து ரோந்துக் கப்பலில் வந்த வீரர்கள் எங்களை விரட்டினர். சூறாவளி மற்றும் மீன்பிடி தடையால் 12 நாள்களுக்கு பின் மீன்பிடிக்க சென்றும் வருவாய் இன்றி நஷ்டம் ஏற்பட்டது' என்றனர்.



## கணவனின் ஆண் உறுப்பில் கொதிநீரை ஊற்றிய மனைவி

### கள்ளக் காதலைக் கைவிட மறுத்தாராம்

ராணிப்பேட்டை,ஒக.17

காவேரிப்பாக்கம் அருகே, கள்ளக்காதலைக் கைவிட மறுத்த கணவரின் ஆண் உறுப்பில், கொதிக்கும் நீரை ஊற்றிய மனைவியை பொலிஸார் கைது செய்தனர்.

ராணிப்பேட்டை மாவட்டம், காவேரிப்பாக்கம் அடுத்த புதுப்பட்டு கிராமத்தை சேர்ந்தவர் தங்கராஜ். (வயது 32).இவர் மனைவி பிரியா (வயது 30). இந்த தம்பதிக்கு, 2 வயதில் மகன், 1 வயதில் மகள் உள்ளனர். சென்னை ஸ்ரீபெரும்புதூரிலுள்ள தனியார் நிறுவனத்தில் தங்கராஜ் பணியாற்றி வருகிறார்.

அவருக்கும், உடன் பணியாற்றும் பெண்ணிற்கும் கள்ளத்தொடர்பு ஏற்பட்டது. இதையறிந்த பிரியா கண்டித்தும், கள்ளக்காதலை கைவிட தங்கராஜ் மறுத்தமையால் தம்பதிக்குள் தினமும் தகராறு ஏற்பட்டது. இந்நிலையில், நேற்று முன்தினம் தங்கராஜ், கள்ளக்காதலியைச் சந்தித்து விட்டு இரவு, 10 மணிக்கு வீட்டுக்கு வந்தார்.

வேதனையடைந்த பிரியா, நள்ளிரவு, 1 மணிக்கு குக்கரில் நீரைக் கொதிக்க வைத்து தூங்கிக் கொண்டிருந்த தங்கராஜின் ஆண் உறுப்பின் மீது ஊற்றினார். அலறிய அவரை அங்கிருந்தவர்கள் மீட்டு, வேலூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். காவேரிப்பாக்கம் பொலிஸார் பிரியாவைக் கைது செய்தனர்.

பொலிஸாரிடம் பிரியா கூறியவை வருமாறு:–

இரு குழந்தைகள் இருக்கும்போது வேறு ஒரு பெண்ணுடன் கணவர் கள்ளக்காதல் வைத்துள்ளார். சம்பாதிக்கும் பணத்தை கள்ளக் காதலிக்குக் கொடுத்து விடுவார். வீட்டுச் செலவுக்குப் பணம் கொடுக்க மாட்டார். கேட்டால் என்னை அடித்து உதைப்பார். கள்ளக்காதலை கைவிட மறுத்த கணவருக்கு நூதன தண்டனை கொடுக்க முடிவு செய்து, கொதிக்கும் வெந்நீரை ஊற்றினேன். இனி அவரால் கள்ளக்காதலியுடன் தனிமையில் இருக்க முடியாது. கள்ளக்காதல் வைத்துள்ள கணவர்களுக்கு இது ஒரு பாடம். – இவ்வாறு அவர் கூறினார்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஒலுவில் துறைமுக மண் அகல்வுக்கு அக்கரைப்பற்று மாநகர சபை உதவி





(நூருல் ஹுதா உமர்)

அம்பாரை மாவட்ட மீனவர்கள் மற்றும் அம்பாரை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வேண்டுகளை ஏற்று, ஒலுவில் அஷ்ரப் ஞாபகார்த்த மீன்பிடி துறைமுக வாயிலுள்ள மண்ணை சமநிலைபடுத்துவதற்கு அக்கரைப்பற்று மாநகர சபையின் மண் அகல்வுக் கருவியான Excavator மற் றும் தெப்பம் போன்ற இயந்திரங்களை நேற்றுஅக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி கையளித்தார்.

கடந்த ஒரு மாத காலமாக ஒலுவில் மீனவர் துறைமுக வாயில் மண்ணை சமநிலைப்படுத்தும் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், அப்பணிகளை மேலும் துரிதப்படுத்த அக்கரைப்பற்று மாநகர சபை இவ்வுதவியைச் செய்வது குறிப்பிடத் தக்கது.

ஒட்டுமொத்த அம்பாறை மாவட்ட மீனவர்களின் நலன்கருதி இப்பாரிய வேலைத்திட்டத்தினை முன்னெடுக்க உதவிக்கரம் நீட்டிய அக்கரைப்பற்று மாநகர சபைக்கும், அதன் முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகிக்கும் அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீன்பிடி இயந்திரப் படகுகள் உரிமையாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் எம்.எஸ்.ஏ. நஸீர் தமது அமைப்பின் சார்பாக நன்றிகளை தெரிவித்தார்.

இதன் போது அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப்பணிப்பாளர் எம்.எஸ்.ஏ. றியாஸ் உட்பட மாவட்ட மீனவர் சங்க பிரதிநிதிகள், மாநகர சபை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# பாதிப்புற்ற குடும்பத்துக்கு உதவியாக 30 லட்சம் ரூபா வாழ்வாதாரத் திட்டம்

## களுவன்கேணியில் வழங்கி வைப்பு

மட்டக்களப்பு – ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட களுவன்கேணி கிராமத்தில் மிகவும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பமொன்றுக்கு லண்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும்லண்டன்ஈழபதீஸ்வரர் கோவில் நிர்வாக சபையினரால் வீடு உட்பட 30 லட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதாரத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

களுவன்கேணி கிராமத்தில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில் பல குடும்பங்கள் வசிப்பதாக லண்டன் ஈழபதீஸ்வரர் கோவில் நிர்வாக சபையினரிடம் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

அதற்கமைய, லண்டன் ஈழபதீஸ்வரர் கோவிலின் கிராமிய சமூகபொருளாதாரமேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தெரிவுசெய்யப்பட்ட பயனாளியான கிருஷ்ணபிள்ளை நிமிலேஸ்வரி குடும்பத்துக்கு 30 லட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. லண்டனை ஈழபதீஸ்வரர் கோவில் நிர்வாக சபையின் உதவித் திட்டத்துக்கான மட்டக் களப்பு மாவட்ட இணைப்பாளர் நாகராஜா ஆனந்தராஜா தலை மையில் நடைபெற்ற இந்நிகழ் வில், ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச செயலாளர்கே.தனபாலசுந்தரம் கலந்துகொண்டு, வீட்டை பயனாளியிடம் கைய ளித்தார்.

ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச சபை உறுப்பினர் வேல் பரமதேவா மற்றும் லண்டன் ஈழபதீஸ்வரர் கோவில் நிர்வாக சபையின் உதவித் திட்டத்திற்கான மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர்களான நாகராஜா ஆனந்தராஜா, லோகநாதன் அனோஜன் ஆகியோர் இணைந்து வாழ்வாதார உதவிகளை வழங்கிவைத்தனர்.

வசிப்பதற்கான வீடு, வாழ்வாதாரத்துக்கு ஆடுகள், கோழிகள், தாராக்கள், அவை வளர்ப்பதற்கான நிரந்தரமான கூடு மற்றும் கொட்டகைகள், தொழில் புரிவதற்காக சைக்கிள் என்பன வழங்கப்பட்டன.

வீட்டு உரிமையாளருக்குக் கடந்த காலத்தில் மீன்பிடித் தொழிலில் ஏற்பட்ட நட்டம் காரணமாக பெறப்பட்டகடனைச் செலுத்துவதற்காக 50 ஆயிரம் ரூபா பணமும் இந்நிகழ்வில் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய டி.ஐ.ஜியாக சரத்குமார







(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ள சரத் குமார நேற்று முன்தினம் காலை மட்டக்களப்பு மாவட்டப் பிரதி பொலிஸ்மா அதிபர் காரியாலயத்தில் தனது கடமைகளை பெறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

பொலிஸாரின் விசேட அணிவகுப்பு மரியாதையை தொடர்ந்து மதவழிபாடுகளிலும் ஈடுபட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் சுபவேளையில் கையொப்பமிட்டுத் தனது கடமையைப் பெறுப் பேற்றுக்கொண்டுள்ளார்.

புதிய பிரதி பொலிஸ்மா அதிபர் முன்னர் களுத்துறையில் பிரதி பொலிஸ்மா அதிபராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பிரதிப்பொலிஸ் அத்தியட்சகர் எம்.சுமதிபால, மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஆர்.குமாரசிறி, மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி ஹெட்டியாராச்சி உட்பட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரகளும் சரத்குமாரவின் துணைவியாரும் பதவியேற்பு வைபவத்தில் கலந்துகொண்டனர்.



# போலி நாணயத் தாள்களுடனும் ஹெரோயினுடனும் ஒருவர் கைது

(பாறுக் ஷிஹான்)

ஹெரோயின் மற்றும் போலி நாணயத்தாள்களை தம்வசம் வைத்திருந்தவரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றை அடுத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை நள்ளிரவு கல்முனை காஸீம் வீதியில் வைத்து விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் சந்தேக நபர் கைதானார்.

இவ்வாறு கைதான நபர் 39 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன் சந்தேக நபர் வசம் இருந்து ரூபா 5000 போலி நோட்டுகள் மூன்று மற்றும் ஹெரோயின் போதைப்பொருள் 3 கிராம் 100 மில்லிகிராம் என்பன விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபரை சான்று பொருள்களுடன் நீதி மன்ற நடவடிக்கைக்காக கல்முனை பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் பாரப்படுத்தினர்.

# பனம்பொருள் உற்பத்தி தொடர்பில் தம்பலகாமத்தில் பயிற்சிக்கு ஏற்பாடு

(ஹஸ்பர்)

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பத்தினிபுர கிராமத்தில் பனம்பொருள் உற்பத்தியில் ஈடுபடுபவர்களுக்கான பயிற்சிநெறி வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ. ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க இந்தப் பயிற்சிநெறி நடத்துவது தொடர்பான கலந் துரையாடல் பனம் பொருள் கைப்பணியாளர் சங்க அங்கத்தவர்களுக்காக நேற்று முன்தினம் பத்தினிபுரம் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் இடம் பெற்றது.





தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு மத்தியில் குடும்ப வருமானத்தை அதிகரிக்கும் பொருட்டு பிரம்பு சார் உற்பத்தியில் ஈடுபடும் பெண் தொழில் முயற்சியாளர்களுக்காக இந்த இலவச பயிற்சி நெறி வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தப் பகுதியில் பனை உற்பத்திசார் கைப்பணிபொருள்கள் உள்ளிட்ட சந்தைப் படுத்தல் நிலையமும் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. முன்னாயத்தக் கூட்டத்தில் தேசிய அருங்கலைப் பேரவையின் உதவி மாகாணப் பணிப்பாளர் பொன்கரன்,கிராம சேவையாளர் நேசராஜ்குமார், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் தங்கரூபன் மற்றும் பனை பனம்பொருள் உற்பத்தியில் ஈடுபடும் பெண்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஆளுநர் ஜீவன் கரிசனை!

சிறையில் நீண்ட காலமாக உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கரிசனை செலுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினரும் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரனால் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் பேசப்பட்டுள்ளது.

மேற்படி விபரங்கள் அடங்கிய ஆவணம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில் வட மாகாண ஆளுநருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

மேற்படி ஆவணத்தில், வழக்குகளின்றி நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் நீண்ட காலமாக வழக்குகள் இடம் பெற்று வருகின்ற கைதிகள் உள்ளிட்ட 46 தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு அனுப்பப்பட்ட ஆவணத்தில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வடமாகாண ஆளுநருக்கு வழங்கப்பட்ட, சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விவரங்கள் தொடர்பில் ஏற்கனவே நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று(செவ்வாய்க்கிழமை) நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் முன்னாள் நீதி அமைச்சர் அலிசப்ரியுடனும் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் கலந்துரையாடல் இடம் பெறவுள்ளதாக ஆளுநர் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## மன்னார் மாவட்டச் செயலகத்தில் சிறப்புற நடந்த திருவள்ளுவர் விழா

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணை மற்றும் வழிகாட்டுதலில் மன்னார் மாவட்ட செயலகம் மற்றும் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டு பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த திருவள்ளுவர் விழா நேற்று (செவ்வாய்க்கிழமை) மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி த.மங்களேஸ்வரன் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ராஜமல்லிகை சிவசுந்தர சர்மா கலந்து கொண்டமையோடு, பிரதேச செயலாளர்கள், திணைக்களத்தலைவர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதன் போது ஆரம்ப நிகழ்வாகத் திருவள்ளுவர் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, மாவட்ட செயலக பிரதான வீதியூடாகத் திருவள்ளுவர் சிலை ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

திருக்குறள் நடனம், சிறப்பு சொற்பொழிவு, குறள் வழி நாடகம், திருவள்ளுவர் புகழ் பாடும் கோலாட்டம், சிறப்புக் கவியரங்கம் ஆகிய நிகழ்வுகள் இடம் பெற்றதோடு, பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

## முல்லைத்தீவு கடலில் ஒளிபாய்ச்சி தொழிலில் ஈடுபட்டவர்கள் கைது!

முல்லைத்தீவு மாவட்ட கடற்பரப்பில் சட்டவிரோத கடற்தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் எனக் கடற்தொழிலாளர் தெரிவித்து வரும் நிலையில் அதனை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழில் நீரியல்வள திணைக்கள அதிகாரிகள் ஈடுபட்டுள்ளார்கள்.

ஞாயிற்றுக்கிழமை இரவு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கடலில் தடைசெய்யப்பட்ட கடற்தொழில் நடவடிக்கையில் ஒன்றான கடலுக்குள் ஒளிபாய்ச்சி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கொக்கிளாய் கடற்பரப்பில் மூன்று படகுகளும், மாத்தளன் கடற்பரப்பில் ஒரு படகும், வலைஞர்மடம் கடற்பகுதியில் இரண்டு படகுகளும் என மொத்தமாக 6 படகுகளுடன் 8 கடற்தொழிலாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கைது செய்யப்பட்ட நபர்களையும் சான்றுப் பொருள்களையும் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையில் கடற்தொழில் நீரியல்வள திணைக்களம் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு வீதியில் கிடந்த பெருந் தொகைப் பணம் உரியவரிடம் ஒப்படைத்த பொலிஸ் உத்தியோகத்தர்!

*வீதியில் கிடந்த நாணயப் பணப்பையொன்றும் லட்சக்கணக்கான ரூபா பணமும் அதன் உரிமையாளரிடம் மீள ஒப்படைக்கப்பட்ட சம்பவம் ஒன்றும் கொழும்பு - வெல்லம்பிட்டிய பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.*

*வெல்லம்பிட்டி பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவில் கடமையாற்றும் இரா மதுசங்க என்பவரே வீதியில் விழுந்திருந்த பணப்பையைக் கண்டெடுத்துள்ளார்.*

*வெல்லம்பிட்டிய பாண்டியாவத்தை பகுதியில் உள்ள வீதியொன்றில் நாணயப் பணப்பை ஒன்று கிடந்துள்ளது. பணப்பையை பரிசோதித்த போது, அதில் ஒரு லட்சத்து 11 ஆயிரத்து 960 ரூபா பணமும், 3 லட்சம் ரூபா பெறுமதியான காசோலையும் இருந்துள்ளது.*

*பின்னர், இது தொடர்பில் வெல்லம்பிட்டிய பொலிஸ் நிலையத்துக்கு அதிகாரி அறிவித்துள்ளார். அதன்படி, பணப்பையின் உரிமையாளருக்கு மேற்படி தகவல் தெரியவர, அவரை பொலிஸ்; நிலையத்திற்கு வரவழைத்து பணப்பையை ஒப்படைத்துள்ளனர்.*

## நெல்லியடியில் அதிக விலைக்கு தண்ணீர் போத்தல் விற்ற உணவகத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை!

தண்ணீர் போத்தலை அதிக விலைக்கு விற்பனை செய்ததாக நெல்லியடியில் உள்ள உணவகம் ஒன்றுக்கு எதிராக யாழ்.மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நெல்லியடியில் உள்ள உணவகம் ஒன்றில் 35 ரூபா விற்பனை விலையாகப் பொறிக்கப்பட்ட தண்ணீர் போத்தலை 70 ரூபாவுக்கு விற்பனை செய்வதாகப் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் , விசாரணைகளை முன்னெடுத்த அதிகாரிகள் , அதிக விலைக்கு தண்ணீர் போத்தலை விற்பனை செய்தமையை உறுதிப்படுத்தி நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதேவேளை தண்ணீர் போத்தலை சான்றுப் பொருள்களாக கைப்பற்றியுள்ளனர். அவற்றை நீதிமன்றில் பாரப்படுத்தி மேற்படி உணவக உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வீட்டில் இருந்தே கடலுணவுகளை பெற்றுக் கொள்வதற்கான வசதி!







பொது மக்கள் தமக்குத் தேவையான கடலுணவுகளை ஒன் - லைன் மூலம் பெற்றுக் கொள்வதற்கான பொறி முறை ஒன்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி சேவையை இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் பம்பலப்பிட்டி மீன்விற்பனை நிலை யத்தில் கடந்த திங்கட்கிழமை சம்பிரதாயபூர்வமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்தார்.

அதனடிப்படையில் பி.ஐ.சி.எம்.ஈ. ஊடாக இலங்கைக் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் விற்பனைநிலையங்களில் இருந்து தேவையான கடலுணவுகளை மக்கள் பெற் றுக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.08.2022இல் வெளியிடப்பெற்றது.